SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை - ஜனவரி 2019

**(January 2019 Examination - AA3 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA31**

# நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்
# (FAR)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவெென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA3 பரீட்சை – ஜனவரி 2019

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**எல்லா வினாக்களுக்கும் விடை எதிர்பார்க்கப்படுகின்றது**

**மொத்தம் 20 புள்ளிகள்**

### வினா 01 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் மற்றும் முன்னிலைப்படுத்துவதற்குமான எண்ணக்கரு சட்டம்**

a) நிதி மூலதன பேணல் எண்ணக்கருவின் அடிப்படையில் உரிமையாளரால் கணக்காண்டு பகுதியில் புகுத்தப்பட்ட மற்றும் வெளியேற்றப்பட்ட காசு தவிழ்ந்த, இறுதி தேறிய சொத்துக்களுடன் ஒப்பிடும் போது ஏற்பட்ட அதிகரிப்பு இலாபமாக கொள்ளப்படும். அதற்கான சமன்பாடு பின்வருமாறு அமையும் P=NA2-NA1+D-AC

பௌதீக மூலதன பேணல் எண்ணக்கருவின் அடிப்படையில் உரிமையாளரால் இடப்பட்ட மற்றும் எடுக்கப்பட்ட காசை தவிர்ந்த, தொடக்கத்தில் இருந்த உற்பத்தி இயலளவை விட இறுதியில் இருந்த உற்பத்தி இயலளவில் ஏற்பட்ட அதிகரிப்பு இலாபமாக கொள்ளப்படும். மூலதன நிதி எண்ணக்கருவின் படி முதலிடப்பட்ட பணத்தொகை மூலதனத்தின் கொள்வனவு வலுவுக்கும் உரிமையாண்மை அல்லது தேறிய சொத்தின் பெறுமதிக்கு சமமானதாக கருதப்படும். பௌதீக மூலதன எண்ணக்கருவின் படி இது செயற்பாட்டு இயலளவுக்கு அதாவது உற்பத்தி இயலளவுக்கு சமமாக கருதப்படும். இங்கு உற்பத்தி நாட்கள் மூலதனத்தின் அடிப்படையாக கொள்ளப்படுகிறது.

**(03 புள்ளிகள்)**

b) தேறிய சொத்து = இறுதி தேறிய சொத்து – ஆரம்ப தேறிய சொத்து – மேலதிக மூலதனம் + பற்று

= 4,500,000 - 3,200,000 - 1,000,000 + 500,000

**இலாபம் = 800,000/-**

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 02 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 2 நியதிச்சட்ட விதிமுறைகள்**

a) நிலைபேற்று அறிக்கையிடலானது கம்பனியொன்றின் பொருளாதார சூழல் சமூக மற்றும் முகாமைத்துவ ஆளுமை செயற்பாடுகள் பற்றிய விபரங்களை தெரிவிக்கும் அறிக்கையாகும்.

நிலைத்தன்மை அறிக்கையிடல் என்பது தினசரி நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார சுற்றுச்சூழல் மற்றும் சமூக விளைவுகள் பற்றி ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு வெளியிடும் அறிக்கையாகும். நிலைத்தன்மை அறிக்கை மேலும் நிறுவனத்தின் மதிப்புக்கள் மற்றும் ஆளுமை மாதிரி, மூலோபாயம் மற்றும் நிலையான உலகப் பொருளாதாரம், மற்றும் அதன் அர்ப்பணிப்பிற்கும் இடையிலான இணைப்பை நிரூபிக்கின்றது.

**(03 புள்ளிகள்)**

b)

1. குறீயீட்டுமதிப்பீடு (BenchMarking) மற்றும் சட்டவிதிகள், தரநிலைகள் மற்றும் தன்னார்வ முயற்சிகள் தொடர்புடைய நிலைத்தன்மை செயல்திறன்களை மதிப்பிடுதல்.
2. நிறுவனங்களின் செல்வாக்கு எவ்வாறு அதன் எதிர்கால நிலையான வளர்ச்சி மீது செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை விளக்குகின்றது.
3. நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களுக்கு உள்ளேயும், பிற வெளி நிறுவனங்கள் உடனும், நிறுவன செயல்திறன்களை ஒப்பீடு செய்தல்.
4. குறியீட்டு தொகுதிகளின் அடிப்பட்டையில் மதிப்பீடு செய்தல்.
5. கம்பனிக்கு நன்மதிப்பையும் தராதரத்தையும் ஏற்படுத்தும்.
6. கம்பனியானது நிலைமைத்தன்மையான அபிவிருத்தியின் மூலம் எவ்வாறு கம்பனி மாற்றத்தை கொண்டுவர முடியும் என்பதை உணரத்தும்.
7. வெளியக பங்குதாரர்கள் கம்பனியின் உள்ளக பெறுமதியை அறிந்துகொள்ள உதவும்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 03 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 03 பகுதி II - கணக்கிட்டு நியமங்கள்**

a. பொருளொன்று / உருப்படியொன்று அடையாளம் காணப்பட்டு பட்டியலிடப்படும் புள்ளியானது விற்பனை ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான நேரமாக அமையும். இந் நிகழ்வில் SHL கம்பனியானது இடர் மற்றும் பொருளாதார ஒன்மைகளை அதன் வாடிக்கையாளருக்கு மாற்றியுள்ளது. ஆகையினால் கம்பனி ரூ. 7.5 மில்லியனை 2018 மார்ச் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கு வருமானமாக ஏற்பிசைவு செய்ய வேண்டும்.

b. பங்குதாரர் பங்கு இலாபம் பெறும் உரிமையாளது உருவாக்கப்படும் போது பங்கு இலாபமானது அங்கீகரிக்கப்படும். 2018 மார்ச் 31 இல் நடைபெற்ற வருடாந்த பொதுக கூட்டத்தில் பங்கு இலாபம் பெறும் உரிமையானது அங்கீகரிக்கப்பட்டது. ஆகையினால் பங்கு இலாபமானது 2017/18 ஆண்டிற்கான கணக்கில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

c. சேவை வழங்களிலான வருமானது அதனை வழங்கும் காலப்பகுதிகள் மீது நேர் கோட்டு

அடிப்படையில் இனங்காணப்படும். சேவை உடன்படிக்கையானது 4 வருடத்திற்கானையால் SHL ஆனது வேலை செய்யப்பட்ட விகிதாசாரத்தின் அடிப்படையில் வருமானத்தை ஏற்பிரைவு செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| வேலை பூர்த்தி செய்யப்பட்ட விகிதாசாரம் | **= 150,000 / 600,000 x 100** | **= 25%** |
| வருமானம் | = 1,000,000 X 25% | = **250,000** |

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு ஏற்பிசைவு செய்யப்பட்ட வேண்டிய வருமானம் ரூ. 25,000 ஆகும்.

*(05 புள்ளிகள்)*

## வினா 04 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 05 காசுப்பாய்ச்சல் கூற்று (LKAS 07)**

**டோக்கியோ டிரேடிங் கம்பனி**

**காசுப் பாய்ச்சல் கூற்று - நேர் முறை**

**2018 மார்ச் 31 இல்முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | (ரூ.) |
|---|---|
| வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற காசு (W-01) | 773,000 |
| சென்மதியாளருக்கான கொடுப்பனவு (W-03) | (643,000) |
| வருமான வரி கொடுப்பனவு (W-04) | (6,500) |
| செலவின கொடுப்பனவு (62,000 - 12,500) | (49,500) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாயவு** | **74,000** |

*(05 புள்ளிகள்)*

**செய்முறைகள்**

**(W-01)**

**வியாபார வருமதியாளர்** (ரூ.)

| | | | |
|---|---|---|---|
| மீ / கொ / வ | 218,000 | காசு | 773,000 |
| விற்பனை | 760,000 | மீ / கொ / செ | 205,000 |
| | **978,000** | | **978,000** |

**(W-02)**

**கொள்வனவு**

| | |
|---|---|
| விற்பனை கிரயம் | 643,000 |
| **இறுதி தொக்கு** | 132,000 |
| ஆரம்ப தொக்கு | (125,000) |
| **கொள்வனவு** | **650,000** |

**(W-03)**

**வியாபார செனமதியாளர்**

| | | | |
|---|---|---|---|
| காசு | 643,000 | மீ / கொ / செ | 135,000 |
| மீ / கொ / செ | 142,000 | கொள்வனவு | 650,000 |
| | **785,000** | | **785,000** |

**(W-04)**

**வருமான வரி**

| | | | |
|---|---|---|---|
| காசு | 6,500 | மீ / கொ / வ | 2,000 |
| மீ / கொ / செ | 3,500 | இலாபநட்ட கணக்கு | 8,000 |
| | **10,000** | | **10,000** |

**பிரிவு *A* இன் நிறைவு**

## பகுதி - B

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்**

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

# வினா 05 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 06 நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு**

**To** – பிரதமநிதிஅலுவலர்

**From** – நிதிக் கணக்காளர்

**Subject** – நிதிச் செயற்பாடுகளின் பகுப்பாயவு

ப/ப எக்கோ புரோக்டெக லங்கா கம்பனியின் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாடுகளின் அடைவு பற்றி நான் அறிக்கையினை சமர்ப்பிக்கின்றேன. இவ் அறிக்கையானது கம்பனியின் இலாபத்தன்மை, வினைத்திறன் மற்றும் வேலை மூலதனமுகாமைத்துவம் என்பவற்றை எடுத்துரைக்கின்றது. கம்பனி வரைபு மற்றும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தொழிற்துறை விகிதாசாரங்களின் மூலம் கம்பனியின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பன ஆராயப்பட்டுள்ளன.

எக்கோ புரோக்டெக் நிறுவனத்தின் மொத்த இலாப விகிதம் 33% ஆகும் மற்றும் தொழிற்துறை வீதம் 40% ஆகும். இதற்கான காரணம் அதிகரித்த விற்பனை கிரயம் அல்லது குறைந்த இலாப எல்லை ஆகும்.

தேறிய இலாப எல்லை மீதான கூமையானது அதிகரித்த அறவிட முடியாக்கடன் மற்றும் கடன் மீட்டல் கிரயத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

எக்கொ டிரோக்பெக் ஆனது முதலீட்டை சிறந்த வினைத்திறனாக முகாமை செய்கின்றது என்பதை அறிய முடியும். கம்பனியானது தொழிற்துறையிலும் பாரக்க அதிகரித்த ROCE ஐ காட்டுவதுடன் அதனுடன் ஒப்பிடுகையில் தொழிற்துறை PBIT ஐ ஆனது குறைவடைந்த போக்கை காட்டுகின்றது. தொழிற்துறையுடன் ஒப்பிடும் போது அதிகரித்த தொக்கு புரள்வானது தொக்கு முகாமைத்துவத்தின் முன்னேற்றத்தை காட்டுகின்றது. இது தொக்கை விற்பனையாக மாற்றுவதற்கான கம்பனியின் வினைத்திறனை காட்டுகின்றது. கடன்பட்டோர் புரள்வு விகிதம் மற்றும் கடன்பட்டோர் வசூலிக்கும் காலத்தின் மீதான விகிதமானது கம்பனி மற்றும் தொழிற்துறை இரண்டிலும் ஒரே நிலைமையினை காட்டுகின்றது. விபரமான பகுப்பாய்வின் பின் கம்பனியானது அதன் சந்தை பங்கை அதிகரித்து கொள்வதற்காக சந்தை ஊடுருவல் தந்திரோபாயத்தை பின்பற்றுவதுடன் அதில் வெற்றியடைந்துள்ளது. கீழ்வரும் பரிந்துரைகளானவை கம்பனியின் எல்லைகளை நிலைப்படுத்தி கொள்வதற்கு முகாமைத்துவத்திற்கு உதவிபுரியும்.

1. பொருளின் சந்தை பிரிவு மற்றும் பொருளின் விலையிடலை முகாமைத்துவம் கவனத்தில் கொள்ள வேண்டும்.
2. வியாபாரக் கழிவினை அங்கரிக்கப்பட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்தல்
3. பொருத்தமெனில் கடன்பட்டோரை காரணிப்படுத்தும் செயற்பாட்டை கருத்தில் கொள்ளல்.

வேறு மேலதிக தகவல்கள் ஏற்பட்டால் என்னால் உதவ முடியும்.

நன்றி

................................

| | | | | கம்பனி | தொழிற்துறை சராசரி |
|---|---|---|---|---|---|
| * | மொத்த இலாப விகிதம் | = | (72,815 / 220,650) x 100 | 33% | **40%** |
| * | தேறிய இலாப விகிதம் | = | (15,620 / 220,650) x 100 | 7.08% | **12%** |
| * | **ROCE** | = | (PBIT / ஈடுபடுத்தப்பட்ட மூலதனம்) | | |
| | | = | [17,750 / (121,030 + 9,950)] x 100 | 13.55% | **8%** |
| | | | **OR** | | |
| | **ROCE** | = | (15,620 / 121,030) x 100 | 13% | 8% |
| * | இருப்பு புரள்வு விகிதம் | = | 147,835 / 11,375 | **13 தடவை** | **10 தடவை** |
| * | கடன்பட்டோர் புரள்வு விகிதம் | = | 220,650 / 25,350 | **8.7 தடவை** | **9 தடவை** |
| * | கடன்பட்டோர் வசூலிக்கும் காலம் | = | 365 / 8.7 | **42 நாட்கள்** | **40 நாட்கள்** |
| | | | **OR** | | |
| | கடன்பட்டோர் வசூலிக்கும் காலம் | = | (25,350 / 220,650) x 365 | **42 நாட்கள்** | |

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## வினா 06 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 05 காசுப் பாய்ச்சல் கூற்று (LKAS 07)**

**சியெஸ்ரோ கிரியேவுன்ஸ் (தனி) கம்பனி**
**காசுப் பாய்வுக் கூற்று - நேரில் முறை**

**2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | | |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கையில் காசுப்பாய்ச்சல் | | |
| வரிக்கு முன் தேறிய இலாபம் | | 2,650,000 |
| | | |
| சீராக்கம்: | | |
| ஆதனம் முடிவுறுத்தலினான இலாபம் **(W-01)** | (200,000) | |
| பெறுமான தேய்வு **(W-04)** | 1,000,000 | |
| வட்டிச் செலவினம் | 250,000 | |
| பணிக்கொடை மீதான ஒதுக்கம் | 90,000 | 1,140,000 |
| தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் இலாபம் | | 3,790,000 |
| செலுத்திய வருமான வரி **(W-02)** | | (30,000) |
| **தொழிற்படு மூலதன மாற்றம்** | | **3,760,000** |
| | | |
| தொக்குகளில் அதிகரிப்பு | (955,000) | |
| வியாபார வருமதிகளில் அதிகரிப்பு | (1,914,000) | |
| வியாபார சென்மதிகளில் குறைவு | (91,000) | (2,960,000) |
| **தொழிற்படு நடவடிக்கை மூலம் ஏற்பட்ட தேறிய காசு** | | **800,000** |
| | | |
| ஆதன, பொறி, உபகரண கொள்வனவு | | |
| ஆதன, பொறி, உபகரண கொள்வனவு **(W-03)** | (990,000) | |
| ஆதன, பொறி, உபகரண முடிவுறுத்தல் | 400,000 | |
| **முதலீட்டு நடவடிக்கைக்களிருந்து தேறிய காசு** | | **(590,000)** |
| | | |
| நிதி செயல்பாடுகள் இருந்து பணப்பாய்ச்சல் | | |
| கடன் பெறல் | 1,000,000 | |
| வட்டி செலுத்தியது | (250,000) | |
| நிதியீட்டு நடவடிக்கைக்களிருந்து தேறிய காசு | | 750,000 |
| | | |
| காசும் காசிற்கு சமானனவையும் ஆண்டின் தேறிய அதிகரிப்பு | | 960,000 |
| ஆரம்பத்தில் உள்ள காசும் காசுக்கு சமானனவை | | 1,320,000 |
| **வருட இறுதியில் உள்ள காசும் காசுக்கு சமானனவை** | | **2,280,000** |

*(10 புள்ளிகள்)*

குறிப்புக்கள்:

**(W-01)**

**ஆதன முடிவுறுத்தல்**

| | | | |
|---|---|---|---|
| கிரயம் | 550 | காசு | 400 |
| இலாபம் நட்டம் | 200 | பெறுமானதேய்வு | 350 |
| | **750** | | **750** |

**(W-02)**

**வருமான வரி**

| | | | |
|---|---|---|---|
| காசு | 400 | மீ / கொ / வ | 1,350 |
| மீ / கொ / செ | 1,770 | இலாபம் நட்டம் | 450 |
| | **1,800** | | **1,800** |

**(W-03)**

**ஆதனம், பொறி, உபகரண கொள்வனவு**

| | |
|---|---|
| 2017 ஏபரல் 01ல் மீதி | 4,300 |
| முடிவுறுத்தல் | (550) |
| | 3,750 |
| இறுதி மீதி | (4,740) |
| **ஆண்டின் போதான கொள்வனவு** | **(990)** |

**(W-04)**

**பெறுமான தேய்வு**

| | |
|---|---|
| 2017 ஏப்ரல் 01 இல் திரள்தேய்மானம் | 1,410 |
| முடிவுறுத்தலுக்கான பெறுமான தேய்வு | (350) |
| | 1,060 |
| ஆண்டிறுதி மீதி | (2,060) |
| **ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு** | **(1,000)** |

aat SRI LANKA

## வினா 07 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 03 பகுதி I - கணக்கீட்டு நியமங்கள்**

**பகுதி A**

**குத்தகை கடன்பட்டோர் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| வியாபார கணக்கு | 2,500,000.00 | காசு | 356,409.75 |
| | | மீ / கொ / செ | 2,143,590.75 |
| | **2,600,000.00** | | **2,600,000.00** |
| மீ / கொ / வ | 2,143,590 | காசு | 417,000 |
| | | மீ / கொ / செ | 1,726,590 |
| | **2,143,590** | | **2,143,590** |

b)

**உழைக்காத நிதி வருமான னணக்கு**

| | | | |
|---|---|---|---|
| வருமானம் | 364,410 | காசு | 364,410 |
| | **364,410** | | **364,410** |

***(06 புள்ளிகள்)***

**a)** குத்தகை கடன்பட்டோர் = **2,143,590**

**b)** உழைக்காத நிதி வருமானம் = **982,047**

செய்முறைகள்

குத்தகை அட்டவணை

| வருடம் | ஆரம்ப மீதி (ரூ.) | ஆண்டு வட்டி (ரூ.) | தவணைக் கட்டணம் (ரூ.) | இறுதி மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 2,500,000 | 425,000 | (781,409.75) | 2,143,590 |
| 2 | 2,143,590 | 364,410 | (781,409.75) | 1,726,59025 |
| 3 | 1,726,590.25 | 293,320 | (781,409.70) | 1,238,700.50 |
| 4 | 1,238,700.50 | 210,579 | (781,409.75) | 667,869.75 |
| 5 | 667,869.75 | 113,537 | (781,409.75) | - |

பகுதி **B**

| அத்தியாயம் 03 பகுதி II - கணக்கீட்டு நியமங்கள் |
|---|

1. இது ஒரு செம்மையாக்கல் நிகழ்வு, ஆகையினால் மோசடியின் விளைவானது 2017/18 நிதியாண்டில் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டும். ஆரம்ப தொக்கு மற்றும் முற்றடக்க வருமானக் கூற்று ரூ. 35.5 மில்லியன் பெறுமதியில் செம்மையாக்கப்படல் வேண்டும்.

2. செயற்பாட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவு செய்யும் கொள்கை நிறுவனத்தின் கடந்தகால நடவடிக்கைகளினுடாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் இது ஒரு ஆக்கபுர்வமான கட்டுப்பாடு ஆகும். ஆகையினால் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் இது செம்மையாக்கம் செய்யப்பட வேண்டும்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**இப்பகுதியின் இரு வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.**
**(மொத்தம் 50 புள்ளிகள்)**

## வினா 08 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 04 பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நிதிக் கணக்குகள்**

**(a)**

**கிறீன் கார்டன் PLC**
**இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமான கூற்று**
**2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டு**

(ரூ. **'000)**

| விபரம் | குறிப்பு | பெறுமானம் |
|---|---|---|
| விற்பனை (262,500 - 300 - 200) | | 262,000 |
| விற்பனை கிரயம் (174,500 - 1,800 + 400) | | (173,100) |
| **மொத்த இலாபம்** | | **88,900** |
| | | |
| ஏனைய வருமானம் - வாகன முற்றடக்க இலாபம் | (W-01) | 40 |
| | | 88,940 |
| விநியோக செலவுகள் | (W-04) | (32,700) |
| நிர்வாக செலவுகள் | (W-05) | (21,790) |
| ஏனைய செலவுகள் (260 + 1,850) | | (2,110) |
| நிதிச் செலவுகள் (3,800 - 180) | (W-03) | (3,620) |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 28,720 |
| வருவான வரி | | (6,500) |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | | **22,220** |

*(10 புள்ளிகள்)*

**(b)**

**கிறீன் கார்டன் PLC**

**நிதி நிலைக் கூற்று**

**2018.03.31 இல்**

**(ரூ. '000)**

| | | | |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்து** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் அவற்றின் தேறியபெறுமதியில் | | | 32,290 |
| புத்துருவாகும் வேலை (600 + 180) | | | 780 |
| **நடைமுறைச் சொத்து** | | | |
| தொக்குகள் (25,000 - 400) | | 24,600 | |
| வியாபார வருமதிகள் (62,000 - 2,000) | 6,000 | | |
| | (3,000) | 57,000 | |
| முற்பண கொடுப்பனவு | | 110 | |
| கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு | | 200 | 81,910 |
| **மொத்த சொத்துக்கள்** | | | **114,980** |
| குறிப்பிடு மூலதனம் | | 40,000 | |
| கைக்கொள் இலாபம் | | 23,720 | 63,720 |
| **நடைமுறைப் பரிப்புக்கன்** | | | |
| அட்டுறு செலவினம் (1,000 + 200) | | 1,260 | |
| வருமான வரிச் பொறுப்புக்கள் | | 1,700 | |
| வியாபார சென்மதி | | 45,000 | |
| வங்கி கடன் | | 3,000 | |
| வங்கி மேலதிகபற்று | | 300 | 51,260 |
| | | | **114,980** |

***(07 புள்ளிகள்)***

**(c)**

**கிறீன் கார்டன் PLC**

**உரிமையாண்மை மாற்றக் கூற்று**

**2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| விபரம் | குறிப்பிடு மூலதனம் | கைக்கொள் இலாபம் | மொத்தம் |
|---|---:|---:|---:|
| மீதி 01.04.2017 | 40,000 | 2,500 | 42,500 |
| பங்கு இலாபம் செலுத்தியது | - | (1,000) | (1,000) |
| ஆண்டிற்கான இலாபம் | - | 22,220 | 22,220 |
| **மீதி 31.03.2018** | **40,000** | **23,720** | **63,720** |

குறிப்பு *:* 2018 மார்ச் 31 ஆந் திகதியில் இருந்த ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் ரூ. 1 வீதம் இறுதிப் பங்கு இலாபம் வழங்க பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

**(03 புள்ளிகள்)**

**(d)**

**கிறீன் கார்டன் PLC**

**ஆதனம், பொறி, உபகரண மாற்றக் கூற்று**

**2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

**குறிப்பு 05 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

கிரயம்

| விபரம் | காணி | கட்டிடம் | மோட்டார் வாகனம் | அலுவலக் உபகரணம் | கணினி மென்பொருள் | மொத்தம் |
|---|---:|---:|---:|---:|---:|---:|
| மீதி 01.04.2017 | 20,000 | 10,000 | 10,000 | 3,500 | - | 43,500 |
| கொள்வளவு | - | - | - | - | 1,800 | - |
| முடிவுறுத்தல் | - | - | | (1,200) | - | (1,200) |
| **மீதி 31.03.2018** | **20,000** | **10,000** | **8,800** | **3,500** | **1,800** | **44,100** |
| <u>பெறுமானதேய்வு</u> | | | | | | |
| 01.04.2017ல் திரள் பெறுமானதேய்வு | - | 6,000 | 2,000 | 950 | - | 8,950 |
| ஆண்டிற்கான பெறுமான தேய்வு | - | 500 | 1,900 | 700 | 500 | 3,600 |
| முடிவுறுத்தல் | - | - | (740) | - | - | (740) |
| **மீதி 31.03.2018** | **-** | **6,500** | **3,160** | **1,650** | **500** | **11,810** |
| | | | | | | |
| **தேறிய பெறுமதி 31.03.2018** | **20,000** | **3,500** | **5,640** | **1,850** | **1,300** | **32,290** |

**(05 புள்ளிகள்)**

செய்முறைகள்

**(W-01)**

**வாகன முடிவுறுத்தல்**

| | | | |
|---|---|---|---|
| கிரயம் | 1,200 | பெறுமானதேய்வு | 740 |
| இலாப / நட்டம் | 40 | காசு | 200 |
| | | காப்புறுதி | 300 |
| | **1,240** | | **1,240** |

**(W-02)**

**முடிவுறுத்திய வாகன பெறுமானதேய்வு**

| | |
|---|---|
| 01.04.2017 இல் | 600 |
| ஆண்டின் பெறுமானதேய்வு | 140 |
| [(1,200 / 5) x (7/12)] | **740** |

**(W-03)**

**கடன் பெறும் கிரயம்**

| | |
|---|---|
| கடன்பெறும் கிரயத்தை மூலதன- | |
| - ப்படுத்தல் 3,000 x 12% x 6 / 12 | 180 |
| | **180** |

**(W-04)**

| | |
|---|---|
| விதியோகித்தில் செலவு | 26,500 |
| மோ/வா பெறுமானதேய்வு | 1,900 |
| அறிவிட முடியாகடன் | 2,000 |
| அறவிட முடியாகடன் ஒதுக்கம் | 2,300 |
| | **32,700** |

**(W-05)**

| | |
|---|---|
| **நிரிவாக செலவுகள்** | |
| பரீட்சை மீதி | 20,200 |
| பெறுமான தேய்வு - மென்பொருள் | 500 |
| கட்டிடம் | 500 |
| அலுவலக உபகரணம் | 700 |
| காப்புறுதி | (110) |
| | **21,790** |

**(W-06)**

**வருமான வரிகணக்கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 6,000 | மீ / கொ / செ | 1,200 |
| மீ / கொ / வ | 1,700 | இலாப / நட்டம் | 6,500 |
| | **7,700** | | **7,700** |

**(W-07)**

**மோட்டார் வாகன பெறுமான தேய்வு**

| | |
|---|---|
| முடிவுறுத்திய வாகனம் | 140 |
| மீதி (8,800 / 5) | 1,760 |
| **ஆண்டிற்குரியது** | **1,900** |

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

## வினா 09 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 07 ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்**

பகுதி **A**

**(a)**

**நன்மதிப்பு கணிப்பு**

| | | |
|---|---|---|
| முதலீடுகள் | | 25,000 |
| கட்டுப்பாடு அற்ற பங்குதாரர் | | 4,420 |
| | | 29,420 |
| **நேறிய சொத்துக்கள்** | | |
| குறிப்பிடு மூலதனம் | 20,000 | |
| கைக்கொள் இலாபம் | 2,100 | 22,100 |
| **நன்மதிப்பு** | | **7,320** |

***(05 புள்ளிகள்)***

(b)

**ICL மற்றும் TL**
**ஒன்றித்த நிதிநிலைக் கூற்று**
**31.03.2018 இல்** **"000" இல்**

| | ICL | TL | செம்மையாக்கல் | ஒன்றித்த பெறுமதி |
|---|---|---|---|---|
| <u>நடைமுறை அல்லா சொத்து</u> | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 55,000 | 15,000 | - | 70,000 |
| திரள் தேய்மானம் | (12,000) | (6,000) | - | (18,000) |
| **தேறிய பெறுமதி** | **43,000** | **9,000** | **-** | **52,000** |
| நன்மதிப்பு - **(W-01)** | | | | 7,320 |
| <u>நடைமுறை சொத்து</u> | | | | |
| தொக்கு **(W-03)** | 20,100 | 20,500 | (500) | 40,100 |
| வியாபார வருமதிகள் | 34,750 | 10,500 | (2,500) | 42,750 |
| காசும் காசுக்கு சமனானவை | 6,500 | 4,600 | 1,000 | 12,100 |
| **மொத்த சொத்துக்கள்** | | | | **154,270** |
| <u>உரிமையாண்மை</u> | | | | |
| குறிப்பிடு மூலதனம் | 82,000 | 20,000 | (20,000) | 82,000 |
| கைக் கொள் இலாபம் **(W-01)** | | | | 18,930 |
| தாயக் கம்பனி | | | | 100,930 |
| கட்டுப்பாடு அற்றபங்குதாரர் **(W-02)** | | | | 5,340 |
| **மொத்த உரிமையாண்மை** | | | | **106,270** |

| | | | | |
|---|---|---|---|---|
| <u>**நடைமுறையல்லா பொறுப்புக்கள்**</u> | | | | |
| வங்கி கடன் | 10,200 | | | 10,200 |
| | | | | |
| <u>**நடைமுறை பொறுப்புக்கள்**</u> | | | | |
| வியாபார சென்மதி | 13,100 | 8,000 | (1,500) | 19,600 |
| வங்கி கடன் | 5,200 | - | - | 5,200 |
| குறும்கால கடன் | | 5,500 | (5,500) | - |
| ஏனைய சென்மதி | 8,600 | 4,400 | | 13,000 |
| **மொத்த உரிமையாணமை மற்றும் பொறுப்புக்கள்** | | | | **154,270** |

***(*14 புள்ளிகள்*)***

**செய்முறைகள்**

**(W-01)**

**ஒன்றித்த நிறுத்திவைத்த இலாப கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| உழைக்காத இலாபம் | 500 | மீ / கொ / வ | 15,750 |
| மீ / கொ / செ | 18,930 | TT - இலாபம் (4,600 x 80%) | 3,680 |
| | **19,430** | | **19,430** |

**(W-02)**

**கட்டுப்பாடு அற்ற பங்குதாரர் கணக்கு**

| | |
|---|---|
| முதலீடு | 4,420 |
| (4,600 x 20%) | 920 |
| | **5,340** |

**(W-03)**

உழைக்காத இலாபம் = (3,000 / 120) x 20 = **500**

பகுதி **B**

**அத்தியாயம் 06 நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு**

a)

| | | **ICL** | | **TL** |
|---|---|---|---|---|
| நடப்பு விகிதம் | = | நடைமுறைச் சொத்து / நடைமுறைப் பொறுப்பு | | |
| | = | 66,850 / 26,900 | = | 35,600 / 17,900 |
| | **=** | **2.48 : 1** | **=** | **1.99 : 1** |

b)

| | | **ICL** | | **TL** |
|---|---|---|---|---|
| நெம்பு விகிதம் | = | கடன் மூலதனம் / உரிமை மூலதனம் | | |
| | = | (10,200 + 5,200) / (15,750 + 82,000) | = | 5,500 / 26,700 |
| | **=** | **15.75%** | **=** | **20.6%** |

c)

| | | **ICL** | | **TL** |
|---|---|---|---|---|
| கடன் கொடுத்தோர் | | | | |
| புரள்வு விகிதம் | = | கடன் கொள்வனவு / சராசரி கொள்வனவு | | |
| | = | (64,000 x 80%) / (12,000 + 13,100) / 2 | = | (36,000 x 80%)/(6,000 x 8,000)/2 |
| | = | 51,200 / 12,550 | = | 28,800 / 7,000 |
| | **=** | **4.08 தடவை** | **=** | **4.11 தடவை** |

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2019 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*

*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*